சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

வழக்கு எண்.ஐ.ஏ.369/2011 இன் ஓ.எஸ்.110/2011

2020ம் ஆண்டு திங்கள் ம் நாள் வாதியின்/ பிரதிவாதியின் மனுதாரரின்/எதிர்மனுதாரரின் PW.4 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.G.சிவகாமி கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் கணேஉஷ்குமார் | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

<u>முதல் விசாரணை (சம்மனின் பேரில்)</u>

17.02.2020 - நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பில் 4வது சாட்சி. சம்மனின் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் மதுரையில் உள்ள அஉறானா மருத்துவமனையில் மருத்துவராக பணி செய்து வருகிறேன். எங்கள் மருத்துவமனையில் மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவமனையாகும். அருப்புக்கோட்டையை சேர்ந்த அப்துல்லா என்பவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளார். அவர் 10.04.2019 அன்று அட்மிட் ஆகி 5 நாட்கள் கழித்து 15.04.2019 அன்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார். அவர் ஆனந்தபிரியா மருத்துவமனையில் அவர் சிகிச்சை எடுத்துக்கொண்டார். அது நான்மேற்சொன்ன அஉறானா மருத்துவமனையின் ஒரு பிரிவாகும். அப்துல்லா, த/பெ அப்துல் ரசாக் தொடர் சிகிச்சையில் வெளிநோயாளியாக இருந்து வருகிறார். கடந்த ஒரு வாரத்திற்கு முன் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தார். அவர் சம்பந்தப்பட்ட எங்கள் மருத்துவமனை ஆவண நகல்களை நான் கொண்டுவந்துள்ளேன். அது சா.சா.ஆ.5 ஆகும். அப்துல்லாவால் அவருடைய வேலைகளை அவரால் செய்ய இயலாது. அவர் வழக்கை நீதிமன்றத்தில் அவராக நடத்த இயலாது. வழக்கறிஞர் குறுக்கு விசாரணையின்போது கேட்கப்படும் கேள்விக்கு பதில் சொல்ல தகுதிவாய்ந்தவராக இருக்கமாட்டார். அவருடைய அன்றாட வேலைகளை மற்றவர் உதவியுடன் தான் செய்துகொள்ளமுடியும்.

குறுக்கு விசாரணை (1 மற்றும் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

அப்துல்லாவை கடந்த 10.04.2019 முதல் தெரியும். 10.04.2019க்கு முன்பு அப்துல்லாவை தெரியாது. 10.04.2019 அன்று அவர் மனைவி பாத்திமா பீவி அப்துல்லாவை அழைத்துவந்தார். அப்துல்லாவின் மனைவி எங்களிடம் அப்துல்லா மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் சிகிச்சைக்காக வந்திருப்பதாக கூறினார். அவரிடம் முன்சிகிச்சை விபரம் பற்றி கேட்டேன். அவர் திருநெல்வேலி பாலசரண்யா மருத்துவமனையில் டாக்டர். அய்யப்பனிடம் 6, 7 வருடங்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக அவர் மனைவி என்னிடம் கூறினார். திருநெல்வேலி பாலசரண்யா மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். மேற்சொன்ன முன்சிகிச்சை சம்பந்தமான ஆவணங்களை நான் பார்க்கவில்லை. நான் மதுரை மருத்துவமனையில் பணிபுரிகிறேன். அந்த மருத்துவமனையின் பெயர் அஉறானா. நான் முழுநேரமாக அந்த மருத்துவமனையில் பணிபுரிகிறேன். ஒவ்வொரு நோயாளியும் தலைமை மருத்துவரை பார்த்தபின்பு தான் எங்களை பார்க்கவருவார்கள். தலைமை மருத்துவர் முன்சிகிச்சை விபரத்தையும் என்னிடம் கூறித்தான் என்னிடம் அனுப்பிவைத்தார். திருநெல்வேலி மருத்துவர் அய்யப்பன் இதேதுறையை சேர்ந்தவர் தான். மேற்சொன்ன மருத்துவமனையில் இருந்து ரெபரல் கடிதம் எதுவும் நாங்கள் பெறவில்லை. அப்துல்லா மனைவி சொன்னதன் அடிப்படையில் தான் முன்சிகிச்சை விபரம் தெரியும். வழக்கு தாக்கல் செய்த 2011ம் ஆண்டு காலத்தில் அப்துல்லாவின் மனநிலை பற்றி எனக்கு தெரியாது. 2011க்கு முன்பு மற்றும் 10.04.2019 க்கு முன்பு அப்துல்லா எவ்வாறு இருந்தார் என்று எனக்கு தெரியாது. எங்களுடைய மருத்துவ ஆவணங்களின்படி 10.04.2019 அன்று அப்துல்லா மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்தார். 5 நாட்கள் உள்நோயாளியாக இருந்த பின்பு ஒவ்வொரு மாதமும் அப்துல்லாவை அவர் மனைவி தான் அழைத்து வந்து சென்றார். என்னை பார்த்தவுடன் நான் மருத்துவர் என்று அவரால் இனம் கண்டுகொள்ள இயலாது. அவருக்கு மறதி வியாதியா என்றால் இல்லை மனநோய் வியாதியாகும். எங்கள் ஆவணங்களின்படி அப்துல்லாவிற்கு 54 வயதாகிறது. நாங்கள் சொல்லும் விசயங்களை சிலநேரம் புரிந்துகொள்வார். சிலநேரம் சம்பந்தம் இல்லாமல் பேசுவார். அப்துல்லா மனச்சிதைவினால் பாதிக்கப்பட்டுள்ளார். மன அழுத்தம் என்பது கவலை மற்றும் வேலையில் ஆர்வமின்மையாக

இருப்பது ஆகும். மனசிதைவு என்பது மனநோய் சம்பந்தப்பட்டது ஆகும். அப்துல்லாவிற்கு மனசிதைவு நோய் இருப்பதை நான் சைகாலஜிகல் எவாலுவேசன் அடிப்படையில் கூறுகிறேன். சா.சா.ஆ.5ன் முதல் பக்கத்தின் படி வழக்கறிஞர் ராமகிருஉஷ்ணனுடைய வேண்டுகோளின்படி அப்துல்லா தலைமை மருத்துவரை பார்த்து அதன்பின்பு நான் சிகிச்சை அளித்துள்ளேன். வழக்கறிஞர் ராமகிருஉஷ்ணன் பற்றி எனக்கு தெரியாது. அப்துல்லா சம்பந்தமாக நான் தலைமை மருத்துவருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவித்துள்ளேனா என்றால் நாங்கள் இருவரும் ஒரே மருத்துவமனையில் புரிவதால் அதற்கான அவசியம் எழவில்லை- 5 நாட்கள் சிகிச்சை மட்டும் போதுமான என்று எதன் அடிப்படையில் தீர்மானித்தோம் என்றால் அப்துல்லாவின் மனைவிக்கு உள்நோயாளியாக இருக்க விருப்பம் இல்லை என்பதாலும் வெளிநோயாளியாக சிகிச்சை எடுக்க விருப்பம் தெரிவித்ததாலும் 5 நாட்களில் நாங்கள் விடுவித்தோம். அப்துல்லா நல்ல மனநிலையில் இருந்து வருகிறார் என்றும் வழக்கறிஞர் கூறியதற்கு இணங்க நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.